மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.
முன்னிலை: திரு.**T.கோகுலகிருஷ்ணன்** B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2022ம் வருடம் ஜூன் மாதம் 16ம் நாள் வியாழக்கிழமை

சுபகிருது ஆண்டு ஆனி மாதம் 02ம் நாள்

**CNR No. TNMD19000037-2022**

**I.A . No.89/2022**

**in**

**O.S. No. 32/2022**

1. M. செந்தில்குமார்
2. P. கணேசன்

..... மனுதாரர்கள்/வாதிகள்

//எதிர்//

1. M. முத்துமாரி
2. P. முருகேசன்
3. B. சாந்தி
4. M. சரவணபிரகாஷ்
5. B. சதீஷ்குமார்

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு **04.03.2022**ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.**P.சிவராம்** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் திரு.**P.இராஜேந்திரன்** அவர்கள் ஆஜராகியும், கடந்த **06.06.2022**ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இந்த மனுவானது, தாவா சொத்தினுள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ நுழையாமலும், தாவா சொத்தில் உள்ள மனுதாரர்கள்/வாதிகளின் அமைதியான அனுபவத்திற்கு இடையூறு செய்யாமல் இருக்கும் வண்ணம் அசல் வழக்கு விசாரணை முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி, கட்டளை 39 விதி 1,2 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டத்தின்படி மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர்கள், அசல் வழக்கில் வாதிகள் என்றும், தாவா சொத்தானது ஆதியில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு கிரையம் கொடுத்த P. ஆனந்தராஜ் என்பவர் மைனராக இருந்தபோது, 16.06.1983ம் தேதியில் அவரது தந்தை பாண்டி என்பவர் சி.துரைப்பாண்டி என்பவரிடமிருந்து கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்து பின்னர், மனுதாரர்கள்/வாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்த P. ஆனந்தராஜ் என்பவர் பெயரில் பட்டா, சிட்டா பெற்று அனுபவம் செய்து வந்துள்ளார் என்றும், தாவா சொத்தில் NHAI விரிவாக்கத்திற்காக மொத்த சொத்தான 6 செண்ட் விஸ்தீரணத்தில் 3-1/2 செண்ட் எடுக்கப்பட்டது போக மீதமுள்ள 2-1/2 செண்ட் வீட்டடி மனையிடத்தை கடந்த 31.08.2021ம் தேதியில் வாடிப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1839/2021ன்படி வாதிகளுக்கு சட்டப்படி பதிந்து கொடுத்து, அதனடிப்படையில் தாவா சொத்தில், AYYA INTEGRATED FARMERS PRODUCER COMPANY LIMITED (CIN: U0100TN2020PTC137715) என்ற பெயரில் விவசாய அபிவிருத்தி விற்பனை அங்காடி நிறுவதற்கான கட்டிட வேலைகள் ஆரம்பித்தபோது, தாவா சொத்திற்கு மேற்குபுறமுள்ள பிரதிவாதிகள், தாவா சொத்தானது புறம்போக்கு நிலம் என்று பொய்யாக கூறி தாவா சொத்தில் கட்டிட வேலை செய்ய விடாமல் இடையூறு செய்து வந்துள்ளனர் என்றும், இதனால் வாதிகள் வாடிப்பட்டி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தபோது, புகாரினை விசாரித்த காவல்நிலைய அதிகாரிகள் வாதிகளுக்கு எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என அறிவுறுத்தி அனுப்பி வைத்த பிறகும், தாவா சொத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்து வந்துள்ளனர் என்றும், வாதிகள் விவசாயம் நலன் சார்ந்த அங்காடி அமைப்பதால், பிரதிவாதிகளின் இடையூறுகளுக்கு இடையில் தாவா சொத்தில் தகர செட் அமைத்து கடை நடத்தி வருகின்றனர். என்றும், பிரதிவாதிகள் கிரையம் பெற்ற ஆவணங்களின்படி 10 அடி அகல தென்வடல் பொதுபாதைக்கும் கிழக்கு என்று பதிவு உள்ளது என்றும், மேற்படி மூலப்பத்திரத்தை ஆராய்ந்தாலே உண்மைநிலை தெரியவரும் என்பதால், பிரதிவாதிகளுக்கு அவர்கள் பயன்படுத்தும் பாதையானது பிரதிவாதிகள் கிரையம் பெற்ற பத்திரத்தின்படி நான்குவழிச்சாலை நிலம் கையகப்படுத்துவதற்கு முன்பிருந்தே பிரதிவாதிகளின் வீட்டிற்கு மேற்குபுறமுள்ள 10 அடி அகல தென்வடல் பொதுபாதை வழியாக சென்று வடக்குப்புறம் நோக்கி பின்னிட்டு கிழக்காக சென்று முக்கிய சாலை செல்ல வேண்டும் என்றும், இதற்கும் வாதிகள் கிரையம் பெற்ற தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாத நிலையில், வாதிகள் கிரையம் பெற்ற இடத்தை பாதையாக பயன்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் வாதிகள் தாவா சொத்தில் கட்டிடம் கட்ட விடாமல் பிரதிவாதிகள் இடையூறு செய்து வந்ததால், காவல்நிலைய உயர் அதிகாரிகளிடம் மனுக்கொடுத்தபோது, அரசு அதிகாரிகள் மூலம் பிரதிவாதிகளின் ஆவணங்களின் அடிப்படையில் நில அளவை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டு, அரசு அதிகாரிகள்

நிலஅளவை செய்வதற்கு அறிவிப்பு அனுப்பியபோதும் அதனை பிரதிவாதிகள் வாங்க மறுத்துள்ளனர் என்றும், பின்னர் கடந்த 31.01.2022ந் தேதியில் தாலுகா சர்வேயர் முறையாக நிலஅளவை செய்து ஊன்றப்பட்ட அத்துமால் கற்களை பிரதிவாதிகள் அன்றையதினமே உடைத்து எறிந்து விட்டனர் என்றும், அதன் பின்னர் வாதிகளால் சமயநல்லூர் காவல்துறை துணை கண்காணிப்பாளரிடம் 01.02.2022ல் புகார் மனு கொடுக்கப்பட்டதில், CSR NO. 72/2022ன்படி வழங்கப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் பணபலம் ஆள்பலம் உள்ளவர்களாக இருப்பதாலும், சட்டத்தை மதிக்காமல் தொடர்ந்து தாவா சொத்தில் உள்ள வாதிகளின் அனுபவத்தினை இடையூறு செய்வதாலும், அசல் வழக்கானது பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கு முடியும் வரை தாவா சொத்தில் உள்ள வாதிகளின் அமைதியான அனுபவத்தினை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**

பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையினை இம்மனுவிற்கு எதிர் உரையாக பாவித்துக்கொள்ளும்படி எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுவில் கண்டுள்ள விபரங்கள் உண்மைக்கு புறம்பானது என்றும், பிராது சொத்து விபரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து, வாதிகள் பெயரில் தாவா இடத்தில் இல்லை என்றும், தாவா சொத்தானது அரசுக்கு பாத்தியமானது என்றும், 2ம் பிரதிவாதி கடந்த 17.04.1993ம் ஆண்டில் க. கிருஷ்ணம்மாள் மற்றும் ஆ. வேலாயுதமணியம் ஆகியோர்களிடமிருந்து ஆவண எண். 2739/1993ன்படி கிரையம் பெற்று 1,4 பிரதிவாதிகளின் வீட்டிற்கும் தெற்கே 3,5 பிரதிவாதிகள் கடந்த 02.02.2011ம் தேதியில் P.முருகேசன் மனைவி இந்திராணி அம்மாள் என்பவரிடமிருந்து ஆவண எண். 227/2011ன்படி கிரையம் பெற்று தாவா சொத்திற்கும் மேற்கு பகுதியில் குடியிருந்து வருகின்றனர் என்றும், இந்நிலையில் கடந்த 2008ம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலை போடப்படும்போது, பிரதிவாதிகள் குடியிருந்து வரும் இடத்திற்கு கிழக்கு பகுதியில் உள்ள பொதுவாய்க்கால் மூடப்பட்டு, குறுகிய அளவில் காலியிடம் இருந்தது அதன் தொடர்ச்சியாக தேசிய நெடுஞ்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த 2008 லிருந்து பிரதிவாதிகள் மற்றும் பிரதிவாதிகள் பின்புறத்தில் குடியிருந்து வரும் கிருஷ்ணா, சின்னப்பொன்னு, சுவாமிநாதன், மணி ஆகியோர் பொதுவான பாதையாக எளியமுறையில் செல்வதற்காக ஒவ்வொருவரும் தாவா இடத்தை பாதையாக பயன்படுத்தி வந்தனர். மேற்படி பாதையை பிரதிவாதிகள் கடந்த 2008 ஆண்டிலிருந்து அனுபவம் செய்து வருகின்றனர். மேலும் தாவா சொத்தின் வடக்கு பகுதியில் கிராமத்திற்கு உண்டான டிரான்ஸ்பார்ம் மரமும், அதற்கு அடுத்து

அரசுக்கு சொந்தமான குளமும் உள்ளது என்றும், குளத்திலிருந்து தண்ணீர் செல்லும் வாய்க்கால் தான் தாவா இடத்தில் மேற்கு பகுதியாகவும், பிரதிவாதிகளின் வீட்டிற்கு கிழக்கு பகுதியாகவும் உள்ளது. எனவே அரசுக்கு சொந்தமான இடம் தாவா இடம் என்பதால் தான் குளம் மற்றும் டிரான்ஸ்பாம் தாவா இடத்தின் வடக்கு பகுதியில் உள்ளது என்றும், தாவா சொத்தின் தெற்கு பகுதியில் ஞானசேகரன் இடம் இருப்பதாக தாவா சொத்தின் நான்குமாலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் மேற்படி ஞானசேகரன் பத்திரப்படி வடக்கே ஆனந்தராஜ் இடம் என குறிப்பிடப்படவில்லை என்றும், மேற்படி அரசுக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்து தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளனர் என்றும், வாதிகள் குறிப்பிடுவதுபோல், தாவா சொத்தை Board of Directors என்ற பெயரில் வாதிகள் கிரையம் பெறவில்லை என்றும், தாவா சொத்தில் விவசாய அபிவிருத்திக்கான அங்காடி எதுவும் இல்லை என்றும், தாவா சொத்தில் சிறிய அளவிலான உரக்கடையும், பெட்டிகடையும் வைத்துள்ளனர் என்றும், தாவா சொத்தினை ஆக்கிரமித்து கடை கட்ட ஆரம்பித்ததால் தான் பிரதிவாதிகள் அதனை தடுத்தனர் என்றும், அதனை மீறியும் தாவா சொத்தில் மூன்று அறைகள் கட்டப்பட்டதால், 4ம் பிரதிவாதி துணைபொது செயலாளருக்கு கடந்த 27.07.2021ம் தேதியில் புகார் மனு அனுப்பியுள்ளார் என்றும், அதன் பின்னரே வாதிகள் கடந்த 31.08.2021ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை உற்பத்தி செய்து, 4வது அறை கட்ட ஆரம்பித்ததும், 4ம் பிரதிவாதி கிராம நிர்வாக அலுவலர் செந்தில்முருகன் அவர்களுக்கு புகார் கொடுத்தபோது, எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால், 03.08.2021ம் தேதியில் வாடிப்பட்டி வட்ட வருவாய் கோட்டாட்சியர், தமிழக முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு புகார் மனு அனுப்பப்பட்டு,பின்னர் கடந்த 11.08.2021ம் தேதியில் வாடிப்பட்டி காவல்நிலையத்தில் 4ம் பிரதிவாதியால் புகார் மனு கொடுக்கப்பட்டபோது, காவல்நிலையத்தில் எவ்வித பிரச்சனையும் செய்யவில்லை என வாதிகளால் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் வீட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள பாதை என்பது எளிதாக செல்லக்கூடிய பாதை இல்லை என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் தாவா சொத்தினை வட்ட சர்வேயர் அளந்து அத்துமால் கற்கள் எதுவும் ஊன்றவில்லை என்றும், உண்மையில் கடந்த 31.01.2022ம் தேதியில் சர்வேயர் இருதரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்து நிலத்தை அளக்க முற்பட்டபோது, சரியான ஆவணங்கள் எதுவும் இல்லாததால், தாவா இடத்தை அளக்கவில்லை என்றும், ஆனால் உண்மை சங்கதிகளை மறைத்து வாதிகளால் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்துள்ளனர் என்றும், காவல்நிலைய விசாரணையிலே இருதரப்பினரும் எவ்வித பிரச்சனையும் செய்யக்கூடாது என அறிவுறுத்தினர் என்றும், தாவா அசல் வழக்கினை 04.03.2022ம் தேதியில் தாக்கல் செய்து விட்டு, பின்னர் 07.03.2022ம் தேதியில் தாவா சொத்தில் சட்டவிரோதமாக கல்ஊன்ற முயற்சி செய்தபோது, பிரதிவாதிகள் தடுத்து விட்டனர் என்றும், வாதிகள் பணம் பலம் உள்ளவர்களாக இருப்பதால், தாவா இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்து வருவதால், தாவா பரிகாரம் வாதிகளுக்கு

கிடைக்கத்தக்கதல்ல என்றும், தாவா சொத்தினைப்பொறுத்து பரிகாரம் கோருவதற்கு வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,

இறுதியாக, இந்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேஆகும்.

**தீர்வு**

4) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகள் சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**5)** கட்டளை 39 விதி 1,2 மற்றும் பிரிவு 151ன்படி உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்கள்/வாதிகளால், இந்த எதிர்மனுதாரர்கள்/எபிரதிவாதிகளுக்கு எதிராக இம்மனுவின் அசல் வழக்கில் இறுதி தீர்ப்புரை ஏற்படும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட மனு அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்கள் சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பார்வைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**6)** அதேபோல, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவிற்காக அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை இந்த மனுவிற்கு எதிர்மனு உரையாக பாவித்துக்கொள்ள வேண்டி மெமோ தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மெமோ சமூகம் நீதிமன்றத்தால் பதிவு செய்து கொள்ளப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பார்வைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**7)** இந்த மனுவில் தீர்மானிக்க பட வேண்டியவை என்னவெனில், கட்டளை 39 விதி 1,2 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின்படி,

1) முதல் நிலை தோற்றம் (Prima Facie)

2) வசதிகளின் சமநிலை (Balance of convenience)

3) ஈடு செய்யமுடியாத இழப்பீடு (Irreparable loss and injury)

ஆகியவற்றை பொறுத்து சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பார்வைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

இம்மனுவில், மேற்கண்ட மூன்று காரணங்களின்படி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு

நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்று சமூகம் நீதிமன்றத்தால் ஆராயப்பட வேண்டியது அவசியமானதாகும்.

**i) முதல்நிலை தோற்றம் (Prima Facie)**

**8)** மனு சொத்தில் மனுதாரர்கள்/வாதிகளின் அனுபவ பாத்தியத்தை பொறுத்து, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் அடிக்கடி இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டு வந்தும், மனு சொத்தில் மனுதாரர்கள்/வாதிகளின் அனுபவ பாத்தியத்திற்கு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ முகவர்களோ எந்த வித இடையூறும் செய்திடாமல் இருந்திட வேண்டி தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்ட நிலையில், மனுதாரர்கள்/வாதிகளுக்கும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கும் இடையில், தாவா சொத்தை பொறுத்து பிரச்சனைகள் ஏற்பட்டு, அது தொடர்பாக வாடிப்பட்டி காவல்நிலையத்தில் மனுதாரர்கள்/வாதிகளால் இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளதாக ம.சா.ஆ.9 மற்றும் ம.சா.ஆ.15, 16 ஆகிய ஆவணங்கள் வாயிலாக இந்த நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது. மேற்படி ம.சா.ஆ9,15,16 ஆகிய ஆவணங்களின்படி மனு சொத்தில் மனுதாரர்கள்/வாதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு இடையே பிரச்சனை இருந்து வந்துள்ளதாக இந்த நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

**9)** எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இந்த மனுவிற்காக தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனு உரையில், தாவா சொத்து என்பது அரசுக்கு சொந்தமானது என்றும், 2008ம் வருடத்திலிருந்து தாவா இடத்தை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பாதையாக அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்திற்கு மேல்புறம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் குடியிருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டும், மேலும் தாவா சொத்தில் மனுதாரர்கள்/வாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, கட்டிடம் கட்ட ஆரம்பிக்கப்பட்டதை பொறுத்து வன்மையாக தடுத்துவிட்டதாகவும், அவ்வாறு தடுத்தும் மனுதாரர்கள்/வாதிகளால் மூன்று அறைகளை கட்டி விட்டதாகவும், தாவா இடத்தில் வடபுறத்தில் நான்காவது அறை கட்ட ஆரம்பிக்கப்பட்டதாகவும், அதை பொறுத்து வருவாய்துறை அதிகாரிகளிடம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஆட்சேபணை புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு இருக்கையில் 2, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இந்த மனுதாரர்கள்/வாதிகள் மற்றும் தங்கசாமிக்கு எதிராக அசல் வழக்கு எண்.33/22 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும், எதிர்மனு உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதை சமூகம் நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

**10)** ஆகவே, மனுசொத்தை பொறுத்து மனுதாரர்கள்/வாதிகளுக்கும் மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கும் இடையே பிரச்சனைகள் ஏற்பட்டும் தகராறுகள் நடந்தும், காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டும், நிலஅளவையரால் அளவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டும் உள்ளதால், இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது. மேற்படி மனுதாரர்கள்/வாதிகளால் இந்த மனு தாக்கல் செய்திட

முதல் நிலை தோற்றம் உள்ளதாக ம.சா.ஆ.9, 15,16 மற்றும் எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளின்படி சமூகம் நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

**ii) வசதிகளின் சமநிலை (Balance of convenience)**

**11)** மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் கண்டுள்ள சொத்து என்பது,

**சொத்து விபரம்**

மதுரை டி மதுரை வடக்கு ரீடி வாடிப்பட்டி சப்டி வாடிப்பட்டி வட்டம், தனிச்சியம் கிராமம் உட்கடை அய்யங்கோட்டை கிராமபுறவில் சர்வே 366/2A1 நம்பரில் புன்செய் செண்டு 81-ல் வடபுறம் கடைசியில் உள்ள செண்டு 6ல் நான்குவழிச்சாலைக்காக அரசால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட 3-½ செண்ட் (140 ச.மீ) இடம் போக மீதமுள்ள 2½ செண்டிற்கு கிழமேலடி வடபுறம் 5.8 மீ., தென்புறம் 7.2 மீ., தென்வடலடி மேல்புறம் 14.6மீ., கீழ்புறம் 14.6 மீ., இடத்திற்கு நான்குமால் விபரம்:-

தாவா சொத்தின் வீட்டு வரி ரசீதுகள் 3/205, 3/201-1, 3/205-2, ஆகும். மின் கட்டண இரசீதுகள் 05-164-002-1520, 1521, 1522 ஆகும்.

வடக்கே: காலியிடம்

கிழக்கே: தேசிய நெடுஞ்சாலை

தெற்கே: 366/39A ஞானசேகர் இடம்

மேற்கே: 366/1A1A1 பெரியசாமி வகையறா இடம்

இதற்குள்பட்டது. 1.00 ஏர்சுக்கு செண்டு 2½ உள்ள சொத்து தங்களுக்கு சுத்த கிரையம். மேற்படி சொத்து அலங்காநல்லூர் யூனியன், அய்யங்கோட்டை ஊராட்சி எல்கைக்குள் உள்ளது

இவ்வாறு சொத்து விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**12)** மேற்படி மனுச்சொத்திற்கு, மூல ஆவணமாக ம.சா.ஆ.1,2 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1,2 ஆவணங்களின்படி, மனுசொத்தின் சர்வே எண் 366/2 சொத்திற்குண்டான முந்தைய உரிமையாளருக்கு பாத்தியப்பட்ட கிரையப்பத்திரம் ம.சா.ஆ.1 ஆகவும், மேற்படி மனு சொத்தின் சர்வே எண். 366/2A1 -க்கு உண்டான பட்டாவின் இணையதள கணினி ஆவணம் ம.சா.ஆ.2 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**13)** மேலும், மனு சொத்தை பொறுத்து முந்தைய உரிமையாளரான ஆனந்தராஜ் என்பவரிடமிருந்து பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் வாயிலாக கடந்த 31.08.2021 தேதியில் இந்த மனுதாரர்கள்/வாதிகளால் கிரையம் பெறப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர்கள்/வாதிகளால் தாவா மனு சொத்தை கிரையம் பெறப்பட்டுள்ளதற்காக ம.சா.ஆ.3 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.3 ஆவணத்தின்படி தாவா சொத்து இந்த மனுதாரர்கள்/வாதிகளுக்கு உரிமை மூலம் கொண்ட ஆவணமாக சமூகம் நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் ம.சா.ஆ.3 ல் கண்டுள்ள சொத்து விபரத்தில் கண்ட விஸ்தீரணத்தை பொறுத்தும் வருவாய் ஆவணத்தில் ஏற்பட்டுள்ள பட்டா விஸ்தீரணத்தை பொறுத்தும், இந்த மனுதாரர்கள்/வாதிகள் மற்றும் மனு சொத்தின் முந்தைய

**உரிமையாளருக்கு இடையே ஒரு பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்பட்டுள்ளது. மேற்படி கிரைய ஒப்பந்தம் ம.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் ம.சா.ஆ.5ன்படி தாவா மனு சொத்தின் சர்வே எண் 366/2A1 என்பது இந்த மனுதாரர்கள்/வாதிகள் பெயரில் உண்டான பட்டாவின் இணையதள கணினி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேபோல, மனுச்சொத்தில் உள்ள வீட்டிற்குண்டான வீட்டு வரி ரசீதுகள் இந்த மனுதாரர்கள்/வாதிகள் பெயரிலும், அதேபோல மின்கட்டண வரி ரசீதுகள் மனுதாரர்கள்/வாதிகள் பெயரிலும் ம.சா.ஆ6 மற்றும் 7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஆவணங்களை பார்வையிடப்பட்ட வகையில் சமூகம் நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.**

**14) மனு சொத்திற்குண்டான உரிமைமூல ஆவணங்கள் மற்றும் அனுபவ சுவாதீன ஆவணங்கள் ஏதும் இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்படவில்லை. மாறாக, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனு உரையில்,**

> "பிராது சொத்து விபரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து வாதிகள் பெயரில் தாவா இடத்திலேயே இல்லை. தாவா பிராதில் குறிப்பிட்டுள்ள சொத்தானது அரசுக்கு சொந்தமானதாகும். பிரதிவாதிகள் தாவா சொத்திற்கும், மேற்கு பகுதியில் குடியிருந்து வருகின்றனர்." **என்றும்,** "கடந்த 2008ம் ஆண்டில் தேசிய நெடுஞ்சாலை (NHAI) போடப்பட்டதால் பிரதிவாதிகள் குடியிருந்து வரும் இடத்திற்கு கிழக்கு பகுதியில் உள்ள பொதுவாய்க்கால் மூடப்பட்டது." **என்றும்,** "தாவா இடத்தை கடந்த 2008 யிலிருந்து பிரதிவாதிகள் மற்றும் பிரதிவாதிகள் பின்புறத்தில் குடியிருந்து வரும் கிருஷ்ணா, சின்னப்பொன்னு, சுவாமிநாதன், மணி ஆகியோர் பொதுவான பாதையாக எளியமுறையில் செல்வதற்காக ஒவ்வொருவரும் தாவா இடத்தை பாதையாக பயன்படுத்தி வந்தனர். மேலும், மேற்படி பாதையை பிரதிவாதிகள் கடந்த 2008ஆம் ஆண்டிலிருந்து தாவா இடத்தை பாதையாக அனுபவம் செய்து வந்தனர்." **என்றும்,** "அரசுக்கு சொந்தமானது என்று வாதிகளுக்கு தெரிந்தே அதனை எப்படியாவது ஆக்கிரமிப்பு செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில், தாவா பிராதில் தாவா சொத்தை P. ஆனந்தராஜ் என்பவரிடமிருந்து கடந்த 31.08.2021ம் தேதியில் ஆவண எண். 1839/2021ன்படி கிரையம் பெற்றதாகவும், அதன்பிறகு தாவா சொத்தில் வாதிகள் AYYA INTEGRATED FARMERS PRODUCER COMPANY LIMITED என்ற நிறுவனத்திற்கான விவசாய உபகரணங்கள் மற்றும் உரங்கள், உற்பத்திப்பொருட்டு விற்பனை அங்காடி அமைத்து கிராம விவசாயிகளின் விவசாயத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மேற்படி ஆனந்தராஜ் அவர்களுக்கு முறையான மறுபயன் கொடுத்து மேற்படி தாவா சொத்தை Board of Directors ஆன வாதிகளின் பெயரில் கிரையம் பெற்று முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொல்லியிருப்பது சுத்தப்பொய். மேற்படி ஆனந்தராஜ் பெயரில் இருக்கும் பொழுதே தாவா இடத்தில் 3 பகுதியாக கடை கட்டி அதன்பிறகு

கடந்த 31.08.2021ம் தேதியன்று வாதிகள் பொய்யாக ஆவணம் புனையப்பட்டு, பின்பு தாவா இடத்தில் சிறிய அளவில் உரக்கடையும், பெட்டிகடை வைத்துள்ளனர்." **என்றும்,** தாவா சொத்தை வாதிகள் தாவா சொத்தில் ஆக்கிரமித்து கட்டிடம் ஆரம்பித்ததால், பிரதிவாதிகள் வன்மையாக தடுத்து விட்டனர்" **என்றும்,** "தாவா சொத்திற்கும் மேற்கு பக்கத்தில் பிரதிவாதிகள் வீடு கட்டி குடியிருந்து வருகின்றார்கள் என்பது மட்டும் உண்மை. அதேபோல் பிரதிவாதிகளின் சொத்திற்கு மேற்கு பகுதியில் 10 அடி அகல தென்வடல் பொதுபாதை உள்ளது."

இவ்வாறு எதிர்வழக்குரையில் மனு சொத்தை பொறுத்து மனுதாரர்கள்/வாதிகளுக்கு உரிமைமூலம் இல்லையென்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**15)** அதே சமயத்தில், எதிர்வழக்குரையில், மனு சொத்தில் மனுதாரர்கள்/வாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு மூன்று அறைகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாகவும் நான்காவது அறை கட்டிடம் கட்டுவதை பொறுத்து ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்ட நிலையில், மனுசொத்தை பொறுத்து இந்த மனுதாரர்கள்/வாதிகளால் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வரப்படுவதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் மறைமுகமாக ஒப்புக்கொள்ளப்படுவதாக சமூகம் நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

**16)** எ.ம.சா.ஆ.1,2 ஆவணங்களை சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பார்வைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்படி, எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டவாறு தாவா மனு சொத்து அரசுக்கு பாத்தியப்பட்டது என்பதை பொறுத்தும், மனு சொத்தானது பாதையாக பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது என்பதை பொறுத்தும் நிரூபணம் செய்யும் விதத்தில், எ.ம.சா.ஆ.1,2 இல்லையென்று இந்நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

ஆகவே, மனுசொத்தானது ம.சா.ஆ.1 முதல் 7 ஆவணங்களின்படி உரிமைமூலம் மற்றும் அனுபவ பாத்தியம் இந்த மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஆதரவாக இருப்பதாக சமூகம் நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

மேற்படி, மனு சொத்தின் அனுபவ பாத்தியம் என்பது இந்த மனுதார்கள்/வாதிகளுக்கு ஆதரவாக சமூகம் நீதிமன்றத்தால் முடிவு காணப்படுவதால், தாவா சொத்திற்கான வசதிகளின் சமநிலையை பொறுத்த வரையில் மனுதார்கள்/வாதிகளுக்கு ஆதரவாக சமூகம் நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**<u>iii) ஈடுசெய்ய முடியாத இழப்பீடு (Irreparable loss and injury)</u>**

**16)** இந்த மனுவில் முதல் நிலை தோற்றம் என்பது மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஆதரவாக உள்ளதாலும், மனு சொத்தின் அனுபவபாத்தியம் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஆதரவாக இருந்து வருவதாக சமூகம் நீதிமன்றத்திற்கு தெரியவருவதாலும், இந்த மனு அனுமதிக்கப்படாவிடில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஏற்படக்கூடிய இழப்பீடை விட இந்த மனுதாரர்கள்/வாதிகளுக்கு அதிக இழப்பீடு ஏற்பட வாய்ப்புள்ளதாக இருதரப்பு ஆவணங்கள் மற்றும் வழக்கு கோப்புகளின்படி சமூகம் நீதிமன்றத்தால் அறிந்து கொள்ளப்படுவதாலும், இந்த

மனுவில், மனுதாா்கள்/வாதிகளுக்கு இம்மனு அனுமதிக்கப்படாவிடில் அதிக இழப்பீடு ஏற்பட வாய்ப்புள்ளதாக சமூகம் நீதிமன்றத்தில் முடிவு காணப்படுகிறது.

ஆகையால், மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நிரூபணம் செய்யப்பட்டதாக மேலே கண்ட காரணங்களின் வாயிலாக சமூகம் நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக,

மனுதார்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவில் கோரப்பட்டுள்ள பரிகாரத்தின்படி, இம்மனுவின் அசல் வழக்கில், இறுதி தீர்ப்புரை ஏற்படும் வரை மனுச்சொத்தில் இந்த மனுதாரர்கள்/வாதிகளின் அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் செய்யாது இருந்திட தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஆதரவாக வழங்கி உத்தரவு பகரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம். T. கோகுலகிருஷ்ணன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**1. மனுதாரர் தரப்பு சாட்சிகள்:** இல்லை

**2. மனுதாரர் தரப்பு ஆவணங்கள்:**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 16.6.1983ம் தேதியிட்ட கிரய பத்திரம் அசல் |
| ம.சா.ஆ.2 | 31.08.2021ம் தேதியிட்ட பட்டா எண்.91க்கான கணினி நகல் |
| ம.சா.ஆ.3 | 31.08.2021ம் தேதியிட்ட கிரைய ஆவணம் அசல் |
| ம.சா.ஆ.4 | 31.08.2021ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்த பத்திரம் அசல் |
| ம.சா.ஆ.5 | 02.09.2021ம் தேதியிட்ட பட்டா எண். 7113க்கான கணினி நகல் |
| ம.சா.ஆ.6 | வீட்டு வரி ரசீதுகள் வரிசை 3 அசல் |
| ம.சா.ஆ.7 | மின்கட்டண வரி ரசீதுகள் வரிசை -3 அசல் |
| ம.சா.ஆ.8 | வருவாய்த்துறை சான்றிதழ் அசல் |
| ம.சா.ஆ.9 | 11.08.2021ம் தேதியிட்ட புகார் மனு ஏற்பு ரசீது கணினி நகல் |
| ம.சா.ஆ.10 | 23.12.2021 வட்டாட்சியர் அலுவலக நோட்டீஸ் நகல் |
| ம.சா.ஆ.11 | 22.12.2021 வட்டாட்சியர் அலுவலக நோட்டீஸ் நகல் |
| ம.சா.ஆ.12 | 31.01.2022 வட்டாட்சியர் அலுவலக நோட்டீஸ் நகல் |
| ம.சா.ஆ.13 | 31.01.2022 வட்டாட்சியர் அலுவலக நோட்டீஸ் நகல் |
| ம.சா.ஆ.14 | 28.02.2022 சர்வே எண். 366க்கான புலப்படம் நகல் |
| ம.சா.ஆ.15 | 01.02.2022- வாதி வாடிப்பட்டி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் நகல் |
| ம.சா.ஆ.16 | 02.02.2022- வாடிப்பட்டி காவல்நிலைய புகார் மனு ஏற்பு ரசீது கணினி நகல் |

ம.சா.ஆ.17 தாவா சொத்தினை காட்டக்கூடிய புகைப்படம் வரிசை -6

ம.சா.ஆ.18 குறுந்தகடு -1

ம.சா.ஆ.19 தாவா சொத்தினை காட்டக்கூடிய புகைப்படம் வரிசை -6

ம.சா.ஆ.20 குறுந்தகடு

ம.சா.ஆ.21 அய்யங்கோட்டை காலனி குடியிருப்பு வீடுகளுக்கான வரைபடம் அசல்

**3. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் -** இல்லை

**4. எதிர்மனுதாரர் தரப்பு ஆவணங்கள்**

எ.ம.சா.ஆ.1 புகைப்படம் வரிசை 4

எ.ம.சா.ஆ.2 குறுந்தகடு

(ஒம். T. கோகுலகிருஷ்ணன்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.